சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 272 / 2014

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 15.09.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | துரை | கிராமம் : | |
| த/பெ : | சின்னய்யாநாயுடு | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ.1
2) இறுதியறிக்கை சான்றிட்டநகல் - ம.சா-ஆ.2
3) மாதிரி வரைபடம் சான்றிட்டநகல் - ம.சா.ஆ.3
4) மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ.4
5) சாட்சிப்பட்டியல் சான்றிட்டநகல் - ம.சா.ஆ.5
6) விடுவிப்புச்சான்று அசல் - ம.சா.ஆ.6
7) விடுவிப்புச்சான்று அசல் - ம.சா.ஆ.7
8) உள்நோயாளி பதிவு அசல் - ம.சா.ஆ.8
9) மருத்துவ பில் அசல் - ம.சா.ஆ-9
10) சிடி ஸ்கேன் பில் அசல் - ம.சாஆ-10
11) மருத்துவ பில் அசல் - ம.சா.ஆ-11
12) மருந்து பில் அசல் - ம.சா.ஆ.12
13) மருத்துவரின் பரிந்துரை குறிப்பு அசல் - ம.சா.ஆ-13
14) பரிசோதனைக் கூட அறிக்கை அசல் - ம.சா.ஆ.14
15) மருத்துவரின் குறிப்புரை அசல் - ம.சா.ஆ.15
16) ஸ்கேன் ரிபோர்ட் அசல் - ம.சா.ஆ-16
17) மருத்துவ பில் அசல் - ம.சா.ஆ-17
18) பரிசோதனைக் கட்டண பில் அசல் - ம.சாஆ-18
19) ஒயர்மேன் உதவியாளர் சான்று நகல் - ம.சா.ஆ.19 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)
20) உறுப்பினர் அட்டை நகல் - ம.சா.ஆ.20 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

மேற்படி ம.சா.ஆ-9, 10, 11, 12, 17, 18 ஆவணங்கள் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயத்தில் ஸ்கார்பியோ காரில் மூன்று பேர் மட்டுமே பயணம் செய்தோம். நான் விபத்து சமயத்தில் அந்த வாகனத்தை ஓட்டவில்லை. முன் இருக்கையில் அமர்ந்திருந்தேன். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலையாகும். நான் விபத்து சமயத்தில் தூக்கத்தில் இருந்ததால் வாகனம் எவ்வளவு வேகத்தில் சென்றது என்று எனக்கு தெரியாது. என்னுடன் அருண்மொழி என்பவர் பயணம் செய்தார். அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் பெயர் எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. நான் பயணம் செய்த வாகனத்தின் முன்னால் சென்ற வாகனம் திடிரென நின்றதால் நான் சென்ற வாகனம் அதில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் அது தான் உண்மை. அந்த முன்னால் சென்ற வாகனம் திடிரென நிறுத்தப்படாவிட்டால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு முழுக்காரணம் முன்னால் சென்ற வாகனம் தான் காரணம் என்றால் நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவும் காரணம். நான் நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக அடையாளம் தெரியாத வாகனத்தை மறைத்து நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான விபத்திற்கு காரணம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்பு நான் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எவ்வளவு நாள் அங்கு சிகிச்சையில் இருந்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் முன் சிகிச்சை எடுத்த நாள் தெரியவில்லை என்று முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக மருத்துவ பில்களை போலியாக தயார் செய்து நஷ்டஈடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.19 ஆவணம் தனியாக வீடுகளுக்கு ஒயரிங் செய்வதற்கான சான்றிதழ் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-20 ஆவணம் காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.20,000 சம்பாதித்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால்சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நான் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அடையாளம் தெரியாத வாகனம் தான் எனக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் 2 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம் / துரை

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.